**பத்திரிக்கைக் குறிப்பு**

# இந்திய ரிசர்வ் வங்கி

www.rbi.org.in
**e-mail:** helpprd@rbi.org.in

**பத்திரிக்கைத்தொடர்பு அலுவலகம்,**
மத்திய அலுவலகம், தபால் பெட்டி எண் 406,
மும்பை – 400 001.

**நவம்பர் 28, 2002**

## அழுக்கடைந்த சிதைந்த பணத்தாள்களை மாற்றிக்கொள்ள வசதிகள்

இந்திய ரிசர்வ் வங்கி (இ.ரி.வ.) பொதுத்துறை வங்கிகளின் கிளைகள் தனியார் துறையிலுள்ள வங்கிக் கிளைகளின் பணவறைகள் ஆகியவற்றை அங்கீகரித்து அழுக்கடைந்த பல்வேறு மதிப்புடைய பணத்தாள்களைப் பெற்றுகொண்டு மாற்றித்தர அனுமதித்துள்ளது. அவ்வாறு மாற்றித் தரும் பணத்தாள்களின் மதிப்புக்கேற்ப பணம் வழங்குதல் இ.ரி.வ. பரிமாற்றம் விதிமுறை (1975)இன்படி நடைபெறுகிறது.

பொதுமக்கக்ளுக்கு மேலும் சிறந்த வசதிகளை நல்க வேண்டும் எனும் நோக்கில் சிதைந்த பணத்தாள்களை மாற்றும் வசதி முப்பூட்டுக் கொள்கல உறைகள் (Triple lock receptacle) இந்திய ரிசர்வ் வங்கியால் வழங்கப்படுகின்றன. பொதுமக்கள் இந்திய ரிசர்வ் வங்கியின் மண்டல அலுவலகங்களின் தகவல் மையங்களிலிருந்து முப்பூட்டுக் கொள்கல உறைகளைப் பெற்று தங்கள் சிதைந்த பணத்தாள்களை உறையிட்டு அந்தந்த இந்திய ரிசர்வ் வங்கி அலுவலகங்களில் கொடுத்து ஒப்புகைச் சீட்டுகளைப் பெறலாம். அலுவலகத்தில் உள்ள தகவல் மையத்தில் அதற்கான பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. அவ்வுறைகள் அதன்வழி சேகரிக்கப்படுகின்றன. சிதைந்த பணத்தாள்களின் பரிமாற்ற மதிப்பு கணக்கிடப்பட்டு அந்தத்தொகை வரைவோலை/கொடுப்பு ஆணை மூலமாக உரியவருக்கு அனுப்பபடுகிறது. சிதைந்த பணத்தாள்களை எந்த ரிசர்வ் வங்கி அலுவலகத்திற்கும் பதிவு அஞ்சல்/காப்புறுதி செய்யப்பட்ட அஞ்சல் வழி அனுப்பிவைத்துப் பணம் பெறலாம்.

பணத்தாள்கள் மிக மோசமாக அழுக்கடைந்தோ, நொய்ந்தோ, பகுதி எரிந்த நிலையிலோ இருக்குமெனில் கையாள இயலாத சூழ்நிலையில் நேரடியாக அவற்றை இந்திய ரிசர்வ் வங்கியின் பணம் வழங்கும் பிரிவுகளில் ஒப்படைக்க வேண்டும். அத்தகைய பணத்தாள்களை வைத்திருப்போர் அதற்குரிய பொறுப்பு அலுவலக கோரிக்கைப் பிரிவினரை அணுக வேண்டும்.

அஜித் பிரசாத
மேலாளர்

**பத்திரிகை வெளியீடு-2002-2003/561**